1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகள் இதற்கு வேண்டியதில்லை. சேல்ஸ்மேன் இடத்திற்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தாலே போதும் என்று நாங்கள் வைத்திருக்கிறோம். ஆனால் பட்டதாரிகளைப் பொறுத்த அளவிற்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலிருந்து வரும் என்று சொன்னால் அவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்க முடியும். 'கிரடிட்' பற்றி நாங்கள் தனியாக கொடுக்கின்ற வழக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே 10 இடங்களில் ஆரம்பித்து உள்ளதாகச் சொன்னார்கள். இப்போது இந்த சுய சேவைப் பிரிவு 25 இடங்களில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அந்த 25 இடங்கள் எவை என்பதையும் அதில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியும் நிச்சயமாக அதில் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 25 ஊர்களின் பட்டியல் தற்போது என்னிடத்தில் இல்லை. ஏன் என்றால் இப்போது தான் பட்ஜெட்டில் அறிவித்து இருக்கிறேன். அதற்கு வேண்டிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாடவரத்தில் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம்.

586—(*வினா எண் 8972) திரு. த. பழனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் லாடவரத்தில் புதியதாக அமைக்க இருந்த கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாங்காடு, சர்வந்தாங்கல் மற்றும் குஞ்சரப்பந்தாங்கல் கிராமங்களை சேர்த்து லாடவரத்தில் ஒரு புதிய விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து ஆரம்பித்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாத காலத்திற்குள்ளே ஆரம்பிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் நானே வந்து அங்கே ஆரம்பித்து வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்பு.

(அ) காட்டுமன்னார் கோவில் பகுதியில் ஏற்பட்ட தகராறு.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் உறுமி பறை மேளம் அடிப்பதில் ஏற்பட்ட தகராறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சா. ஜெயச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் பகுதியில் வன்னியர் மக்களுக்கும், ஆதி திராவிடர் மக்களுக்கும் இடையே மேளம் அடிக்கும் விஷயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக அப்பகுதியில் நிலவும் நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்குடி கோவில் பகுதியில் வாழும் ஆதி திராவிடர்கள், உறுமி பறை மேளம் அடித்தல், தண்டல் பணிகள் போன்ற இன்ன பிற சிறு வேலைகளைச் செய்வதை வெறுத்து, அவற்றை கைவிட முடிவு செய்து,